மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. இது தொடர்பாகப் பேசாதீர்கள். வேறு செய்தி பேசுங்கள்.

11-00 மணி

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அறிவிக்கும்போது Point of order கூடாது.

1. திரு. சா. சிவசுப்பிரமணியன்.
2. திரு. எம். இராமச்சந்திரன்.
3. திரு. ஆ. நடராசன்.
4. பேராசிரியர் க. பொன்னுசாமி.
5. திரு. பி. வி. இராஜேந்திரன்.
6. திரு. செ. நூர்முகமது.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைப்பற்றி ஒரு குற்றச்சாட்டு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாகப் பேசக் கூடாது. No point of order உட்காருங்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் உறுப்பினர் பதவித் தகுதியின்மைக்கு ஆளாகியிருப்பதாகச் சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு 19–1–1991 ஆம் நாளன்று அளித்த மனு—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள்— மாண்புமிகு 3 உறுப்பினர்கள்—நாங்கள், நேற்று, 19 ஆம் தேதியிட்டு 3 பேரை, கட்சியை விட்டு நீக்கப்பட்டவர்களை,